பதவிஶ்ரீபுர பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதவிஶ்ரீபுர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவிஶ்ரீபுர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால்

இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நடப்பாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	துரிதமாக ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	செலுத்தப்பட வேண்டிய செலவுகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	நடப்பாண்டில் கொள்வனவு செய்த வாயு பதமாக்கி இயந்திரத்தின் பெறுமதி ரூபா 2,931,109 மூலதன மாக்கப்பட்டிருக்க வில்லை. பெறுமதி	எதிர்வரும் வருடத்தின் இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் போது மூலதனமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	மூலதன செலவுகளை சரியாக கணக்கிலிட வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டில் அன்பளிப்பாகக் கிடைத்த ரூபா 507,330 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் வருடத்தின் இறுதி கணக்குகள் தயாரிக்கப்படும் போது கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	அன்பளிப்புகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஈ)	2023 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப் பெற்ற ரூபா 522,503 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் நடப்பாண்டின் வருமானம் ஒன்றாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்வரும் வருடத்தின் போது வருமானங்களாக சரியாக கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	மாகாண விசேட அபிவிருத்தி உதவி வேலை திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்காக கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 1,000,000 ஆன தொகை கடன் பட்டோராக காட்டப்பட்டிருக்கவில்லை.	சரியாக கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	கிடைக்கப்பெற வேண்டிய மீதிகள் கணக்குகளில் சரியாக காட்டப்பட வேண்டும்.
(ஊ)	1994 ஆம் வருடத்திலிருந்து 2024 ஆம் வருடம் வரையான காலத்துக்குள் பொருட்கள் மெய்மை ஆய்வின் ஊடாக நீக்குவதற்கு முன்மொழிக்கப்பட்ட ரூபா 218,291 ஆன புத்தகங்களின் பெறுமதியை கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் வருடத்தின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது கணக்குகளின் ஊடாக நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(எ)	வைப்பு பேரேட்டில் கையிருப்பாக ரூபா 234,353 ஆன தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.	எதிர்வரும் வருடத்தில் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது நாட்குறிப்பு ஊடாக சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	பேரேட்டு கணக்குகள் சரியாக குறிப்பிடப்பட வேண்டும்.
(ஏ)	நடப்பாண்டின் செயற் திட்டங்களுக்குரிய ரூபா 9,928,409 ஆன மூலதனத்துக்கு வருமானத்தில் பங்களிப்பு செய்கின்ற கணக்கு குறைவாக காட்டப்பட்டிருந்தது.	எதிர்வரும் வருடத்தில் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது நாட்குறிப்பு ஊடாக சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உப பதிவேட்டின் பிரகாரம் மீதிகள் மற்றும் 03 கணக்குகளின் பிரகாரம் மீதிகளுக்கிடையில் ரூபா 5,738,370 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது.	எதிர்வரும் வருடத்திலே இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது நாட்குறிப்பு ஊடாக சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	வேறுபாடுகள் பரிசீலிக்கப்பட்டு சீர் செய்யப்பட வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 185,917,493 ஆன 06 கணக்கீட்டு விடயங்களுக்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது.	காணி மற்றும் கட்டிடங்கள் சட்ட ரீதியான உரிமையை சுவீகரிக்க தேவையான ஆவணங்களை பதவிஸ்ரீபுர பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்துள்ளதுடன் எஞ்சிய மீதிகள் எதிர்காலத்தில் சரி செய்வதென.	கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்			
(i)	24 பிரிவு	சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாதைகள் இன்வென்றியிற்கு உட்படுத்தாதிருந்ததுடன் அவ்	எதிர்காலத்தில் இவை அனைத்தையும் பூரணப்படுத்தி	பிரதேச சபை சட்டம் ஏற்பாடுகள்

		அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பதென.	பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	119 பிரிவு	வாராந்த சந்தை ஒழுங்குபடுத்தலிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை.	எதிர்காலத்தில அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	பிரதேச சபை சட்டம் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	134 பிரிவு	சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரியும் வரிகளும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உரிய திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மதிப்பீடுகள் மேற்கொள்ளுதல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதாக.	பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iv)	159 பிரிவு	மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 1,070,513 ஆன நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஒரு பகுதி அறவிடப்பட்டிருப்பதுடன் எஞ்சிய மீதிகளையும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	பிரதேச சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை			
(i)	5 (xii) ஆம் விதி	பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள்/ ஊழியர்கள் கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 பிரகாரம் பிணை வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள்/ ஊழியர்கள் கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021

				பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	193 ஆம் விதி	பாதீடு மற்றும் குறைநிரப்பு அங்கீகார செலவுகளுடன் செலவின விடயங்களின் உள்ளவாறான செலவுகளை ஒப்பிட்டு மிகை மற்றும் பற்றாக்குறைகளிற்கான காரணம் காட்டும் கூற்றுக்களை கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்க வில்லை.	எதிர்வரும் வருடத்தின் இறுதி கணக்குகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	218 ஆம் விதி	கிரயம் ரூபா 160,952,333 ஆன காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொரு ஆண்டுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	2015ஆம் வருடத்திற்கு முன்னர் நிலையான சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக் கவில்லை என்பதனால் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	பிரதேச சபையின் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 02/2018 சுற்றறிக்கை	சுற்று நிருபத்தின் பிரகாரம மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.	எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 16(2) ஆம் உப பிரிவு.	சபையின் செயலாற்றல் அறிக்கை இறுதி கணக்குகளுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் சரியாக சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.	கணக்காய்வு சட்டத்தின பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,635,829 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,946,727 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

வருமான மூலம்	2024				2023			
	மதிப்பிடப்பட்ட வருமானம்	பில் போடப்பட்ட வருமானம்	சேர்க்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம	பில் போடப்பட்ட வருமானம	சேர்க்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000	ரூபா 000
வாடகை	800	753	760	44	700	647	640	51
அனுமதிப் பத்திர கட்டணம்	720	913	899	174	500	746	740	160
ஏனைய வருமானம்	20,000	17,314	17,205	853	12,000	15,127	14,383	744
கூட்டுத் தொகை	21,520	18,980	18,864	1,071	13,200	16,520	15,763	955

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
கிழக்கு மாகாண சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட துணை சட்டங்களுக்கு இடையில் விளம்பர அறிவித்தல் முறைமை படுத்துதல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான துணை சட்டம் விதிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த துணை சட்டத்தின் பிரகாரம் கட்டணங்கள் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மாகாண சபையின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட துணை சட்டத்தின் பிரகாரம் இந்த நிறுவனத்தினால் குறித்த விளம்பர பலகைக்காக கட்டணங்கள் அறவிடப்பட்டுக் கொண்டிருப்பதுடன் குறித்த நிறுவனஙடகளுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக.	வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டிய அனைத்து பணிகளும் இணங்கானப்பட்டு துணைச் சட்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்காததுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரையும் துணைச் சட்டங்களைள் விதித்திருக்க வில்லை.	வருமானங்களை ஈட்டக் கூடிய செயற் திட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டிருப்பதுடன் எதிர்காலத்தில் நிச்சயிக்கப்பட்ட திட்டங்கள் உடனான துணை சட்டம் விதிக்கப்பட்டு மேலும் புதிய வருமானங்களை ஈட்டக் கூடியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக.	பிரதேச சபை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் வருடத்திலிருந்து 2023 ஆம் வருடம் வரை அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் 02 விநியோகிக்கப்பட்டு இருப்பதுடன் 2024 ஆம் வருடத்திற்காக கிடைக்கப்பெற்ற 25 விண்ணப்ப படிவங்களுக்காக 09 அபிவிருத்தி அனுமதி பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும் அதிகாரப்பிரதேசத்தில் எந்த ஒரு அனுமதியற்ற நிர்மான பணிகளும் அறிக்கை படுத்தப்படாததன் காரணமாக இந்த பணிகள் ஒழுங்குபடுத்தப்படாதிருப்பது அவதானிக்கப்பட்டது.	அதிகார பிரதேசத்தினுள் காணப்படுகின்ற அனைத்து நிர்மாண பணிகளுக்காக அபிவிருத்தி அனுமதி பத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக.	காணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

(ஆ)	சபைக்கு சொந்தமாக திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக சரியான திட்டமொன்று இருக்கவில்லை. எவ்வாறாயினும் நகரில் கழிவுகளை வேறாக்கி பெற்றுக் கொள்ள 2022 ஆண்டில் ரூபா 959,820 செலவில் குப்கை தொட்டில்களை கொள்வனவு செய்திருந்த போதும் வேறாக்கிய கழிவுகளை பெற்றுக் கொள்ளும் போது வேறாக்கிய கழிவுகள் மீண்டும் கலப்பதால் அதற்காக செலவு செய்த பணம் பொருளாதாரமற்ற செலவாகிவிட்டது.	சபைக்கு சொந்தமான திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்வதற்கு புதிய திட்டத்தின் பிரகாரம் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.	திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 336,457 ஆன முற்பணம் மீதியை தீர்ப்பதற்கு முறையான திட்ட நடைமுறை ஒன்றை பின்பற்றி இருக்கவில்லை.	இவற்றை முறையாக தீர்ப்பதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென	முற்பணங்களின் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும்.
(ஆ)	தொடர்ந்தும் நிலவிவரும் ரூபா 3,256,708 ஆன ஒப்பந்த வைப்புக்களை விடுவிக்க அல்லது பொருத்தமானவாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	-மேற்படி-	ஒப்பந்த நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.
(இ)	பெறுமதி ரூபா 1,745,236 ஆன பல்வேறு வைப்புக்களை இனங்கண்டு தீர்க்க அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இவற்றை முறையாக தீர்ப்பதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென.	வைப்பு காலாவதியான மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாறான ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது 16 பதவிகளில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன.	குறித்த பிரிவினால் எழுத்து மூலமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு கோரப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் வருடத்திலேயே மீண்டும் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையில் பணிபுரியும் ஒரு நூலக உதவியாளருக்கு 2007 மற்றும் 2024 க்கு இடையில் ஒரு சம்பள உயர்வு கூட செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	ஊழியர்கள் திருப்தி அடையும் வண்ணம் குறித்த திகதியில் சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

3.5 வாகன அணி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபாரிசு
2012 டிசம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்று நிருபத்தின் பிரகாரம் பிரதேச சபைக்கு உரித்தல்லாத கிரயம் ரூபா 18,009,050 ஆன 05 வாகனங்களை முறையாக சுவிகரித்துக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கவில்லை.	சொத்துக்கள் முகாமைத்துவத்தை சுவிகரித்துக் கொள்ளாத சொத்துக்கள் தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சு மற்றும் RMV நிறுவனத்துடன் கலந்துரையாடப்படுவதுடன் சுவிகரிக்கும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ள உள்ளதாக.	துரிதமாக சொத்துக்களை சுவிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளக கணக்கய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்திருந்ததுடன் நடைமுறை ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு நிகழ்சித் திட்டத்தை இனங்கண்டிருக்கவில்லை. அவ்வாறே உள்ளக	வேலைப் பழு மற்றும் சபையின் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக தவறவிடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான	உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும்.

கணக்காய்வு திட்டமொன்றை தயாரித்து தேசிய கணக்காய்வு அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.	தவறுகள் இல்லாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக.

4.2 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு பதிவேட்டின் பிரகாரம் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையும், 05 செலவின விடயங்களில் 17 சதவீதம் முதல் 39 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டததனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்பட வில்லையென அவதானிக்கப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை.	பாதீடு நடைமுறை சாத்தியமானதாக தயாரிக்கப்பட வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையும் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் மீண்டும் கலக்கப்படுதலும், அவை சுதந்திரமாக சுற்றாடலிற்கு வெளிவிடப்படுவனாலும் வெள்ளம் ஏற்படும் சந்தர்ப்பங்களை போன்றே கடும் மழை காலங்களில் முறையற்றதாக வெளிவிடப்பட்ட கழிவுப் பொருட்கள் நீர் வாயில்களிற்கு கழுவிச் செல்லப்படுவதால் நீர்வாழ் உயிரினங்களுக்கு போன்றே வன சீவராசிகளிற்கு மற்றும் மனித வர்க்கத்தினரிற்கும் சுற்றாடல் பிரச்சினைகளிற்கு முகங்கொடுக்க ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.	சபையினால் ஒன்று திரட்டப்படுகின்ற கழிவுகளை அகற்றுகின்ற கழிவு மையத்திலே மழைக்காலங்களில் கழிவுகள் மழை நீருடன் கலக்கப்படுவது குறைக்கப் படும் வகையிலும் சுற்றாடல் மற்றும் வன ஜீவராசிகளுக்கு ஏற்படுகின்ற சேதங்களை குறைவுபடுத்திக் கொள்ளும் வகையிலும் அந்த மையங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக.	கழிவுகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும், மேலும் ஒழுங்குமுறை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.